# இயல் 2 - இந்திய வனமகன்

## ஜாதவ்பயேங் காட்டை எவ்வாறு உருவாக்கினார்?

முன்னுரை :-

அஸ்ஸாம் மாநிலத்தின் ஜோர்விராட் மாவட்டத்தைச் சேர்ந்த ஜாதவ்பயேங், பிரம்மபுத்திரா ஆற்றின் நடுவில் உள்ள மிகப் பெரிய தீவில் முப்பது ஆண்டுகள் தனது கடின உழைப்பால் ஒரு காட்டை உருவாக்கியவர், "இந்தியாவின் வனமகன்' என்று அழைக்கப்படுபவர்.

மரங்களின் மீது ஆசை:

1979ஆம் ஆண்டு பிரம்மபுத்திரா ஆற்றில் ஏற்பட்ட வெள்ளத்தால் அடித்து வரப்பட்ட பாம்புகள் அத்தீவில் கரை ஒதுங்கின. அங்கு மரங்கள் இல்லாததால் பல செத்துப்போயின. இதைக் கண்ட அவருக்கு அங்கு மரங்கள் வளர்க்க வேண்டும் என்று எண்ணம் தோன்றியது. அதற்காக ஊர் மக்களிடம் உதவியை நாடிய பொழுது, யாரும் உதவ முன் வரவில்லை.

மூங்கில் காடு :

தன் கைகளில் கிடைத்த விதைகளை விதைத்து நாள்தோறும் தண்ணீர் ஊற்றினார். ஆயினும் ஒரு விதைகூட முளைக்கவில்லை. பிறகு வனத்துறையினரை அணுகியபோது 'அத்தீவில் மூங்கில் மரம் மட்டுமே வளரும்' என்று கூறினர். உடனே மூங்கில்களைக் கொண்டு வந்து வளர்க்கத் தொடங்கினார்.

மண்ணின் மாற்றம் :

அசாம் வேளாண்மைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜாதுநாதிடம் சென்று மரம் வளர்க்கும் திட்டம் பற்றிக் கூறினார். உடனே அவர், 'மண்ணின் தன்மையை அதற்கு ஏற்ப மாற்ற வேண்டும். அதற்கு மண் புழுக்கள் மட்டுமின்றிச் சிவப்புக் கட்டெறும்புகளும் உதவும்' என்று கூறினார். எறும்புகளைக் கொண்டு வந்து அங்கு விட ஆரம்பித்தார்; கட்டெறும்புகள் ஊர்ந்து செல்லச் செல்ல மண்ணின் தன்மை சிறிது

சிறிதாக மாறத் தொடங்கியது. அவர் நட்ட மரங்கள் அனைத்தும் வளர்ந்தன..

புதிய காடு உருவாக்குதல்:

ஒரு பழம் சாப்பிட்டால் கூட அதன் கொட்டையை வீசி எறியாமல் விதையாகச் சேர்த்து வைத்தார். பிறகு மழைக்காலம் தொடங்குவதற்கு முன் விதைகளை எடுத்து அத்தீவில் தூவத் தொடங்கி விடுவார். இப்படி ஒவ்வோர் ஆண்டும் அவர் தூவிய விதைகள்தாம் இன்று காடாக அங்குக் காட்சி அளிக்கின்றது.

முடிவுரை :

காட்டில் பறவைகள் வந்து தங்கின. பறவைகளின் எச்சத்தால் பரவிய விதைகள் அந்தக் காடு வளர மேலும் துணை புரிந்தன. பிறகு முயல், மான், காட்டுமாடுகள், யானைகள், பாம்புகள், கழுகுகள், காண்டா மிருகங்கள்,புலிகள் என்று அனைத்து உயிரினங்களும் வந்து தங்க காடு முழுமை அடைந்தது. இவ்வாறு ஜாதவ்பயேங் காட்டை உருவாக்கினார்.